மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : புள்ளிவிவரங்கள் இப்போது இல்லை. ஆனால் இந்த ஒட்டப்பிடாரத்தில் உள்ள கட்டடம், திரு. டி. எஸ். கிருஷ்ணன் நாயர் அவர்களால் வாடகை இல்லாமல் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாநிலம் பூராவிலும் உள்ள அரசாங்க அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

Distribution of water from Pandravedu tank

* 445 Q.—THIRU E. S. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal for construction of masonry distribution of water from Pandravedu tank to Kesavarajakuppam village ayacuts in Pallipet Sub-taluk in Chingleput district and

(b) if so, the value of the estimates

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 33,000.

சூலூருக்கு சிறப்பு அங்காடி.

* 446 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மக்களுக்கு மலிவு விலையில் பொருள்கள் கிடைக்க வழி செய்ய சூலூரிலும் பல்லடத்திலும் கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

சித்தர்க் காட்டிலுள்ள நவீன அரிசி ஆலை

* 447. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் சித்தர்க் காட்டிலுள்ள நவீன அரிசி ஆலை எப்போது செயல்படத் துவங்கும்?